பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

22.08.2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, பீகார் மற்றும் மேற்கு வங்கத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.
- வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினைச் சந்தித்து, பல்வேறு விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
- நிலக்கரி இறக்குமதி குறைந்து, உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.
- தேசிய விளையாட்டு தினத்தையொட்டி நடைபெறும் நிகழ்வுகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.
- தேசிய ஜூனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் ஹரியானா, ஒடிசா அணிகள் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, பீகார் மற்றும் மேற்கு வங்கத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

பீகாரின் கயாவில் இன்று காலை நடைபெறும் நிகழ்ச்சியில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

இரண்டு ரயில் சேவைகளையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார்.

அவுண்டா - சிமாரியா பாலத் திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பக்தியார்பூர் முதல் மொகாமா வரையிலான தேசிய நெடுஞ்சாலையின் நான்கு வழிப் பிரிவை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

முசாஃபர்பூரில் ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தையும் அவர் திறந்து வைக்கிறார்.

முன்கரில் தூய்மை கங்கை இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அவர் திறந்து வைக்கிறார்.

பல்வேறு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வீடுகளின் சாவிகளை அவர் ஒப்படைக்கிறார்.

பின்னர் கொல்கத்தா செல்லும் அவர் அங்கு மெட்ரோ ரயில் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

ஹவுரா பகுதியில் மேற்கொள்ளப்படும் உயர்மட்ட ஆறுவழி விரைவுச் சாலைத் திட்டத்துக்கும் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர், மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

உலகளாவிய விவகாரங்கள், யுக்ரைன் தொடர்பான விஷயங்கள் போன்றவை குறித்து ரஷ்ய அதிபருடன் ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

ரஷ்ய துணைப் பிரதமர் திரு டெனிஸ் மந்துரோவ் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு செர்ஜி லாவ்ரோவ் ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து ரஷ்ய அதிபரிடம் எடுத்துரைத்ததாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நிலக்கரி இறக்குமதி குறைந்து, உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் வணிக ரீதியிலான நிலக்கரி சுரங்கங்களின் 13-வது சுற்று ஏலத்தை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நிலக்கரி இறக்குமதி கடந்த ஆண்டை விட ஒன்பது சதவீதம் குறைந்துள்ளதாக கூறினார்.

வளர்ந்து வரும் எரிசக்தித் தேவைகள் காரணமாக நிலக்கரிக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

அரசால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும், சிறந்த செயல்திறனும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கெனவே 12 சுற்றுகளில் 134 சுரங்கங்கள் ஏலம் விடப்பட்டதன் மூலம், 41 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்புள்ள முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலக்கரித் துறையில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சுரங்க ஒதுக்கீட்டில் அதிக வெளிப்படைத்தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் திரு கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

தேசிய விளையாட்டு தினத்தையொட்டி நடைபெறும் நிகழ்வுகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரபல ஹாக்கி வீரர் தியான்சந்தின் பிறந்த நாளான ஆகஸ்ட் 29ஆம் தேதி, தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்படுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டு, இந்த தினத்தையொட்டி 29-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை நாடு முழுவதும் மூன்று நாட்கள் விளையாட்டு இயக்கம் நடத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நடவடிக்கைகளில் பெருமளவில் மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இவை நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு தினத்தன்று நாடு முழுவதும் உள்ள மக்கள் விளையாட்டு மைதானங்களுக்குச் சென்று ஒரு மணி நேரம் விளையாட்டு மற்றும் உடல் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் திரு. சுதர்சன் ரெட்டியும் இத்தேர்தலில் போட்டியிட மனுதாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனுவை திரும்பப் பெற வரும் 25ஆம் தேதி கடைசி நாளாகும். தேர்தல் செப்டம்பர் 9ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான பார்வையாளர்களாக மத்திய அரசின் கூடுதல் செயலாளர்கள் திரு. சுஷில்குமார் லோஹானி மற்றும் திரு. D. ஆனந்தன் ஆகியோரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

<<<<>>>>

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

தில்லியில் கைத்தறி கண்காட்சியை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களை உலக அளவில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதுபோன்ற கண்காட்சிகள் அதிக அளவில் நடத்தப்படும் என்றும் திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<>>>>

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ் தமிழகத்தின் சேலத்தில் விமான உதிரி பாகங்கள் மற்றும் பாதுகாப்புத் தளவாட உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்தியாவில் ஜெட் எஞ்சின்களை தயாரிப்பது தொடர்பாக சுதந்திர தின உரையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டது ஊக்கமளிப்பதாக உள்ளது என்று சேலத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர் திரு. சுந்தரம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதன் மூலம் தேசப்பாதுகாப்பு வலுவடையும் என்று தொழில்முனைவோர் திருமதி லதா கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில், மின் உற்பத்திக்கான காற்றாலை இறகுகள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் இவற்றின் ஏற்றுமதி இந்த ஆண்டு, 90 சதவீதம் அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பீஹார், ராஜஸ்தான், குஜராத், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் இன்று கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மகாராஷ்டிரா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களிலும், தில்லியிலும் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே குஜராத்தின் சௌராஷ்டிரா, போர்பந்தர், நவ்சாரி ஆகிய பகுதிகளில் தொடர் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய ஜூனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் ஹரியானா, ஒடிசா அணிகள் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

ஜலந்தரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஹரியானா அணி, உத்தரப்பிரதேச அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஒடிசா அணி - பஞ்சாப் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

இறுதியாட்டம் நாளை நடைபெற உள்ளது.

<<<<>>>>

கேலோ இந்தியா நீர் விளையாட்டுத் திருவிழா ஸ்ரீநகரில் நேற்று தொடங்கியது.

தால் ஏரியில் 3 நாட்கள் இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<>>>>

இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவராக திரு. அஜய்சிங் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

34 மாநில சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று வாக்களித்த இதற்கான தேர்தலில் திரு. அஜய்சிங் 40 வாக்குகளையும், அவரை எதிர்த்து போட்டியிட்ட திரு. ஜஸ்லால் பிரதான் 26 வாக்குகளையும் பெற்றனர்.

<<<<>>>>>